**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

**<u>DVC. 1/2021</u>**

இந்நீதிமன்ற எழுத்தர் திரு கருணாகரன், Junior Assistant என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். கலையரசி (PW1)<br>வயது. | நாள் 17/03/2023 |
| க/பெ. மலைக்கொழுந்து | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>ம.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லிதான் வழக்கறிஞர் தாக்கல்செய்துள்ளார்.

2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்தேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும்.

3. எதிர்மனுதாரர் தனது பதிலுரையில் சொன்ன அனைத்தும் உண்மை என்றாலும் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. எனக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். எனக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் 19.01.2018 அன்று திருமணம் நடந்தது. திருமணத்தின் பிறகு 10 நாட்கள் நான் எனது மாமியார் வீட்டில் வாழ்ந்தேன்.

5. அந்த 10 நாட்களில் மறுவீடு செல்வதும் மற்றும் மற்ற சம்பிரதாயங்கள் நடைபெற்றது என்றால் சரிதான். இரண்டு நாட்கள் மட்டுமே எனது மாமியார் வீட்டில் வாழ்ந்தேன் என்றால் சரியல்ல. 10 நாட்கள் முழுவதும் மாமியார் வீட்டில் வாழ்ந்தேன். 10 நாட்கள் கழித்து எனது கணவரின் அண்ணன் வீட்டிற்கு என்னை அழைத்து சென்றார்கள் அங்கு 5 மாதங்கள் வாழ்ந்தேன்.

6. அந்த 5 மாதங்கள் கழித்து காஞ்சிபுரம் பக்கத்திலுள்ள பொன்னேரி கரை என்ற ஊரில் நானும் எனது கணவரும் தனியாக வசித்து வந்தோம். அங்கு ஒரு 5 மாதம் வாழ்ந்தேன்.

7. நான் திருமணத்திற்கு முன்பு உடல் சரியில்லாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்பு தொடர்ந்து உடல் சரியில்லாமல்

இருந்து மாத்திரைகள் எடுத்துக்கொள்ளும் பழக்கத்தில் இருந்தேனா என்றால் இல்லை.

8. நாங்கள் தனியாக வாழ்ந்தபோது எனது கணவரின் அண்ணன், அண்ணி, அக்கா, அக்காவின் கணவர், அக்காவின் பிள்ளைகள் மொத்தம் 10 நபர்கள் அங்கு வந்து அங்கிருந்த பாத்திரம், பண்டங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு விளங்கனூருக்கு சென்றுவிட்டார்கள். அவர்களுடன் நானும் விளங்கனூருக்கு சென்றேன்.

9. நான் விளங்கனூருக்கு வருவதற்கு முன்பும், அதன் பின்பும் எனது கணவரும் அவரது உறவினர்களும் வரதட்சணை கேட்டு எனக்கு பிரச்சனை கொடுத்திருந்தார்கள். மேற்சொன்ன நபர்கள் அனைவரும் என் வீட்டை காலி செய்து பொருட்களை எடுப்பதற்காக வந்தார்களே தவிர என்னிடம் எந்த பிரச்சனையும் அவர்கள் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. நாங்கள் காஞ்சிபுரம் அருகில் தனிக்குடித்தனம் செய்து கொண்டிருந்தபோது தனது கணவர் வேலைக்கு சென்றவுடன் அவருக்கு தெரியாமலேயே நான் எனது அம்மா வீட்டிற்கோ அல்லது வேறு எங்காவதோ சென்றுவிடுவேன் என்றால் சரியல்ல.

11. நான் அவ்வாறு வெளியே சென்றுவிடுவதை அந்த வீட்டின் உரிமையாளர் எனது கணவரிடம் சொன்னார் என்றாலும் அது குறித்து எனது கணவர் என்னிடம் கேட்ட போது எனது கணவரை நான் கத்தியைக் காட்டி மிரட்டி சண்டை போட்டேன் என்றால் சரியல்ல.

12. நான் தனிக்குடித்தனம் செய்து கொண்டிருந்தபோது வீட்டிலிருந்த பாத்திரங்களை நள்ளிரவில் கீழே போட்டு உடைப்பேன் என்றாலும் அதனால் தான் அந்த வீட்டின் உரிமையாளர் எங்களை வீட்டை காலி செய்ய சொன்னார் என்றாலும், என் மீது உள்ள தவறை மறைப்பதற்காகத்தான் எதிர்மனுதாரர் மீது பொய்யாக களங்கம் கற்பிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனைகள் ஏற்பட்டால் எனது உறவினர்களான மதுரை, முத்துலட்சுமி, முருகன், குமார் ஆகியோர்களை அழைத்து வந்து எனது கணவரை நாங்கள் அனைவரும் சேர்ந்து ஒரு அறையில் பூட்டி அடிப்போம் என்றால் சரியல்ல.

14. ஏன் அவ்வாறு இரவில் பொருட்களை போட்டு உடைக்கிறாய் அதனால் தான் வீட்டை காலி செய்ய சொல்லிவிட்டார்கள் என்று எனது கணவர் என்னிடம் கேட்டதற்கு நான் எனது உறவினர்களான மேற்சொன்ன நபர்களை அழைத்து வந்து அவரை அடித்தேன் என்றாலும், அதற்கு எனது கணவர் செய்யூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்

பேரில் புகார் ஏற்பு எண். 390/2019, தேதி 09.06.2019 கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

15. மேற்சொன்ன புகாருக்கு பயந்துகொண்டு நான் எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான புகார் கொடுத்து, பொய்யான வழக்கு பதிவு செய்து அதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

16. உண்மையிலேயே நான் சொல்வது போல் இந்த சம்பவம் நடந்திருந்தால் எதிர்மனுதாரர்கள் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே நான் புகார் கொடுத்திருப்பேன் என்றால் நான் செங்கல்பட்டு காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்கள் வரதட்சனை கொடுமை செய்கிறார்கள் என்று புகார் கொடுத்துள்ளேன்.

17. செங்கல்பட்டு காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்ததற்கான ஆதாரமாக அந்த புகார் நகலையோ அல்லது புகார் ஏற்பு சான்றையோ இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

18. 09.06.2019 அன்று எதிர்மனுதாரர் மலைக்கொழுந்து, மதுரை, முத்துலட்சுமி, முருகன் மற்றும் குமார் ஆகியோர் தாக்கியதாக செய்யூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் செய்யூர் உதவி ஆய்வாளர் விசாரணைக்காக அன்றைய தினமே வருமாறு அழைத்தபோது, மேற்சொன்ன நான்கு நபர்களும் எதிர்மனுதாரரின் தந்தையை அடித்துவிட்டு, தங்களது செல்வாக்கை பயன்படுத்தி இதில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

19. எதிர்மனுதாரர்கள் கொடுத்த புகாரில் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்காக 11.06.2019 ல் ஒரு பொய்யான புகாரை கொடுத்து அதன் புகார் ஏற்பு எண். 398/2019 கொடுக்கப்பட்டது என்றாலும் அதைக் கருத்தில் கொண்டு 31.08.2019 அன்று மேற்சொன்ன புகார் ஏற்பு எண்ணில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள் மீது வழக்கு பதிவு செய்து இந்த முதல் தகவல் அறிக்கை அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

20. நான் எனது புகாரில் சொல்லியுள்ளது போல் சம்பவங்கள் நடந்திருந்தால் எதிர்மனுதாரர் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே அவர் என்னிடம் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு எதுவும் நடக்காததால் தான் இன்றைய தேதி வரை புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. செங்கல்பட்டில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

**21.** நான் எதிர்மனுதாரர்கள் மீது கொடுத்த புகாரான குற்ற எண். 200/2019 லும் எதிர்மனுதாரர்கள் என்னை வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்தியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

**22.** எனது குடும்பத்தினர் செய்த தவறை மறைப்பதற்காக எதிர்மனுதாரர்கள் மீது பொய்யான புகார் ஒன்றை கொடுத்துவிட்டு அதில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**23.** எதிர்மனுதாரர்களை நான் ஒருநாளும் சரிவர பராமரித்தது கிடையாது என்றாலும் நான் வழக்கிற்காக எனது கணவரின் உறவினர்களின் பெயர்களை சேர்த்துள்ளேன் என்றாலும் எதிர்மனுதாரர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**24.** எனது சகோதரர் முருகன் ஊராட்சி செயலாளராக மணப்பாக்கம் கிராமத்தில் அரசு பணி செய்து கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். இந்த வழக்கு முழுவதும் காவல் துறையில் வேலை செய்து இடையில் நின்று ஊராட்சி செயலாளராக பணி செய்து கொண்டிருக்கும் முருகன் என்பவரை காப்பாற்றுவதற்காக வேண்டி எதிர்மனுதாரர்கள் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.
Sd/- Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur